DESEMBER 2020. SPRÅK: [TAMIL]

# கொரோனா வைரஸ் தடுப்பூசி குறித்த விரைவான வழிகாட்டுதல்

COVID-19 (கொரோனா வைரஸ்) நோய்த்தொற்றைக் குணப்படுத்த உதவும் தடுப்பூசி பற்றி நோர்வேகியன் பொது சுகாதார நிறுவனம் வழங்கியுள்ள சுருக்கமான தகவல்கள்.



## யாருக்கு தடுப்பூசி போட வேண்டும்?

65 வயது அல்லது அதற்கு மேலுள்ளவர்களுக்கு.

குறிப்பிட்ட நோயுள்ள பெரியவர்களுக்கு

தடுப்பூசி இலவசமானது.



## தடுப்பூசி எவ்வாறு போடப்படும்?

தடுப்பூசி ஒரு கையில் போடப்படும்.

குறிப்பிட்ட சில வாரங்கள் இடைவெளியில் அந்த ஊசி இரண்டு முறை போடப்படும்.

உங்களுக்கு ஏதேனும் அலர்ஜி இருந்தால், வேறு மருந்துகளைப் பயன்படுத்தினால் அல்லது உடல்நிலை சீராக இல்லையென்றால் அதை தெரியப்படுத்தவும்.




## தடுப்பூசி எவ்வளவு சிறப்பாக வேலை செய்யும்?

COVID-19 நோய்க்கு எதிராக தடுப்பூசி உங்களை பாதுகாக்கும்.

பெரும்பாலான மக்கள் இரண்டாவது ஊசி போட்ட 1-2 வாரங்களுக்கு பிறகே அதிலிருந்து பாதுகாக்கப்படுவர்.

தடுப்பூசி போட்டுக் கொண்டாலும் நோய்த்தொற்று பரவுவதைத் தடுப்பதற்காக, மக்கள் அறிவுறுத்தல்களைப் பின்தொடர வேண்டும்.



## தடுப்பூசி எவ்வாறு வேலை செய்யும்?

கொரோனா வைரஸைக் கண்டறிந்து அதற்கு எதிராக போராடுவது எப்படி என்பது குறித்து உடலிற்கு தடுப்பூசி கற்றுக்கொடுக்கிறது.

தடுப்பூசி விரைவாக உடலில் இருந்து வெளியேறிவிடும்.

எனினும், வைரஸுக்கு எதிராக எவ்வாறு போராட வேண்டும் என்பதை உடல் நன்கு அறியும்.



## பக்க விளைவுகள்

இந்தத் தடுப்பூசி ஆயிரக்கணக்கான மக்களுக்கு இடையே அதிகபடியான ஆய்வுகளில் பரிசோதிக்கப்பட்டது. இதன் பொதுவான பக்க விளைவுகள்:

- ஊசி போடப்பட்ட இடத்தில் வலி
- சோர்வு
- தலைவலி
- உடல் வலி
- காய்ச்சல் அல்லது குளிர்

இந்தப் பக்க விளைவுகள் அசவுகரியமானது ஆனால் சில நாட்களில் சரியாகிவிடும்.



## பொதுவாக இல்லாத பக்க விளைவுகள்

தடுப்பூசி போடப்பட்ட பிறகு உங்களுக்கு எதிர்பாராத, கடுமையான அல்லது நீண்ட காலமாக ஏதேனும் அறிகுறிகள் இருந்தால் மருத்துவர் அல்லது உடல்நல நிபுணரைத் தொடர்புகொள்ளவும்.

கொரோனா வைரஸ் தடுப்பூசியைக் குறித்து உங்களுக்கு மேலும் தவல்கள் தேவைப்பட்டால், நோர்வேகியன் பொது சுகாதார நிறுவனத்தின் இணையதளத்தைப் பார்க்கவும்:
https://www.fhi.no/en/id/vaccines/coronavirus-immunisation-programme/